2003 நவம்பர் 4] [பேரவைத் தலைவர்]

ஒரு வார்த்தையில் அதைச் சொல்லிவிட்டு, ஒரு வாக்கியத்தில் சொல்லிவிட்டுப் போகலாமே தவிர, நீங்கள் ஒரு நீண்ட பிரசங்கம் செய்வதற்கு அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) நீங்கள் நீண்ட பிரசங்கம் செய்ய அனுமதிக்க முடியாது. அவையைவிட்டு தயவுசெய்து வெளியேற வேண்டுமென்றால் வெளியேறுங்கள். இல்லாவிட்டால் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

5. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

பிற்பகல் 12-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல் (கூச்சல்-குழப்பம்) (தி.மு.க. உறுப்பினர்கள் கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்) திருமதி செல்வி முருகேசன்.

***திருமதி செல்வி முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 174 முதல் 178 வரையிலான 5 அறிக்கைகளை குழுத் தலைவரின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். முனைவர் மு. தம்பிதுரை. (குறுக்கீடுகள்)

டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 132 முதல் 134 வரையிலான 3 அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன். (குறுக்கீடுகள்)

(இ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திருமதி வளர்மதி ஜெபராஜ். (குறுக்கீடுகள்)

திருமதி வளர்மதி ஜெபராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003-2004 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் 35 முதல் 38 வரையிலான நான்கு அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.*

(தி.மு.க. உறுப்பினர்கள் தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர் மற்றும் பா.ம.க. உறுப்பினர்கள் கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பலமுறை எச்சரித்ததற்குப் பிறகும் அவையில் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவை நடவடிக்கைகளுக்கு குந்தகம் விளைவிக்கிற காரணத்தால் அவர்களையும் சரி, குந்தகம் விளைவிக்கிற ஏனைய பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்களையும் சரி அவையை விட்டு வெளியேற்ற வேண்டுமென்று அவைக் காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன். (கூச்சல்-குழப்பம்.)*

6. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (குறுக்கீடுகள்) அமைச்சரிடம் சொல்லுங்கள். அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.